2024 – செப்டம்பர் மாதம் 03– ஆம் தேதி செவ்வாய்க்கிழமை
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

*எம்.சி.ஓ.பி. நெம்பர் : 174 /2019*

*2024–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 03 – ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய P W 4, வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9 –வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. N. லலிதா,* Gr.II Bench Clerk *அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| பெயர் | : | P W 4, V. ராமச்சந்திரன் |
| தகப்பனார் பெயர் | : | வெள்ளிமலை |
| ஊர் | : | கீழவளவு காவல் நிலையம் |
| வட்டம் | : | மேலூர் |
| மாவட்டம் | : | மதுரை |
| தொழில் | : | சிறப்பு சார்பாய்வாளர் |
| வயது | : | 49 |

<u>தேதி: 03.09.2024.</u>

**<u>முதல் விசாரணை:–</u>**

நான் தற்போது கீழவளவு காவல் நிலையத்தில் சிறப்பு சார்பாய்வாளராக பணிபுரிந்து வருகின்றேன். கீழவளவு காவல் நிலைய குற்ற எண் 232/2016 என்ற வழக்கில் சாட்சியம் அளிக்க ஆவணங்களுடன் வந்துள்ளேன். மேற்படி குற்ற எண்ணில் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்து அதன் பிறகு திருத்தப்பட்ட அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். திருத்தப்பட்ட அறிக்கையை தாக்கல் செய்த பின்னர் குற்றவாளியை கைது செய்தேன். குற்றவாளியின் பெயர் மூக்கன், த/பெ. வீரன் என்றால் சரிதான். காயம்பட்ட நபரின் பெயர் மலர் என்ற ஜெயராஜ் ஆகும். இவ்வழக்கில் பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு விட்டது என்றால் சரிதான். குற்ற இறுதி அறிக்கை கோப்பிற்கு எடுக்கப்படாமல் நிலுவையில் உள்ளது. இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கை **ம.சா.ஆ.17** ஆக குறியீடு செய்யப்படுகின்றது. திருத்தப்பட்ட அறிக்கை **ம.சா.ஆ.18** ஆக குறியீடு செய்யப்படுகின்றது. குற்றப்பத்திரிக்கை **ம.சா.ஆ.19** ஆக குறியீடு செய்யப்படுகின்றது. மனுதாரர்

தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஓட்டுநர் உரிமம் இருதரப்பு சம்மதத்தின் பேரில் **ம.சா.ஆ.20** ஆக குறியீடு செய்யப்படுகின்றது.

**<u>குறுக்கு விசாரணை:– (2–ம் எதிர்மனுதாரர் தரப்பில்)</u>**

நான் தாக்கல் செய்துள்ள முதல் தகவல் அறிக்கையின் படி விபத்து நடந்தது 14.06.2016 ஆகும். ஆனால் முதல் தகவல் அறிக்கை 22.06.2016 –ம் தேதி பதிவு செய்யப்பட்டது. இடைப்பட்ட காலத்திற்கான காலதாமதத்திற்குறிய ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான். காயம்பட்ட நபர் மருத்துவமனையில் கேமா நிலையில் இருந்ததாலும், அவரது மனைவி துணைக்காக இருந்ததாலும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய காலதாமதம் ஆனது. விபத்து குறித்து காயம்பட்ட நபரின் மனைவி தான் புகார் கொடுத்தார். காயம்பட்ட நபரின் மனைவி கொடுத்த புகாரின் அடிப்படையில் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. அந்த புகாரில் என் கணவரை அடையாளம் தெரியாத வாகனம் அடித்து சென்று விட்டது என்று தெரிவித்துள்ளார் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் அடையாளம் தெரியாத வாகனம் என்று சொல்லியுள்ள நிலையில் அந்த வாகனத்தை எப்போது அடையாளம் கண்டு பிடித்தோம் என்றும், எதிரியை எப்போது கைது செய்தோம் என்றும் அந்தவாகனத்தை கைப்பற்றி மோட்டார் வாகன ஆய்விற்கு எப்போது அனுப்பினோம் என்றும், உள்ள விபரங்கள் குறித்து ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான். வாகன உரிமையாளர் இந்த விபத்தில் எனது வாகனம் சம்மந்தப்படவில்லையென்றும், போலீசார் தவறுதலாக எனது வாகனத்தின் பதிவு எண்ணையும், வாகனத்தையும் காட்டி வழக்கு பதிவு செய்துள்ளார்கள் என்று மதுரை உயர் நீதிமன்ற கிளையில் வழக்கு தாக்கல் செய்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த வழக்கு நிலுவையில் இருந்ததால் தான் குற்ற இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தும், கோப்பிற்கு எடுக்காமல் நிலுவையில் இருந்து வருகின்றது என்றால் சரியல்ல. குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்படாமல் இருந்து

வருவதற்கான காரணம் தெரியவில்லை. சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையில் காயம்பட்டநபர் தலைக்கவசம் அணிந்திருந்ததாக சொல்லப்படவில்லையென்றால் சரிதான். சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையில் காயம்பட்ட நபரின் பெயர் மலர் என்ற ஜெயராஜ் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கொண்டு வந்துள்ள சிடி பைலில் இருந்து வரும் காயச்சான்றிதழில் காயம்பட்ட நபரின் பெயர் மலர் என்ற ஜெயராஜ் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தில் விபத்து நடந்த இடம் ரோட்டின் மையப்பகுதியில் நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இடது ஓரமாக விபத்து நடந்ததாக தெரிகிறது. காயச்சான்றிதழில் விபத்து ஏற்பட்டதாக குறிப்பு உள்ளது ஆனால் எந்த எந்த வாகனங்களுக்கிடையே விபத்து ஏற்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. மோட்டார் வாகன ஆய்வறிக்கையிலும் விபத்தில் சம்மந்தப்பட்ட இரண்டு வாகனங்களும் எந்த தேதியில் ஆய்விற்குட்படுத்தப்பட்டது என்று சொல்லப்பட்டுள்ளதா என்றால் 18.12.2017 –ம் தேதி, TN 59 B Z 2652 என்ற வாகனம் ஆய்விற்குட்படுத்தப்பட்டுள்ளது. 11.12.2017–ம் தேதி TN 59 Q 5511 என்ற மகேந்திரா டிராக்டர் வாகனம் ஆய்விற்குட்படுத்தப்பட்டுள்ளது. விபத்து நடந்து சுமார் இரண்டரை வருடங்கள் கழித்து மோட்டார் வாகன ஆய்விற்குட்படுத்தப்பட்டுள்ளது என்றால் ஒன்றரை வருடங்கள் கழித்து ஆய்விற்குட்படுத்தப்பட்டுள்ளது. TN 59 Q 5511 என்ற மகேந்திரா டிராக்டர் வாகனம் ஆய்விற்குட்படுத்தப்படும் போது தகுதிச்சான்று 18.04.2001–ல் இருந்து 17.04.2016 வரை தான் எப்சி உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். விபத்து 14.06.2016 அன்று நடைபெற்றது என்றால் சரிதான். TN 59 Q 5511 என்ற மகேந்திரா டிராக்டர் வாகனத்திற்குறிய மோட்டார் வாகன ஆய்வறிக்கை எ.**சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகின்றது. TN 59 B Z 2652 என்ற வாகனத்திற்குறிய மோட்டார் வாகன ஆய்வறிக்கை எ.**சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகின்றது. மாதிரி வரைபடம் எ.**சா.ஆ.3** ஆக

குறியீடு செய்யப்படுகின்றது. இந்த விபத்திற்கும், 1–ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லையென்றும், மனுதாரர் கேட்டுக்கொண்டதன் பேரில் 1–ம் எதிர்மனுதாரர் வாகனத்தை இவ்வழக்கில் நஷ்டஈடு பெறவேண்டும் என்பதற்காக பொய் வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை:– இல்லை.**

**ஒப்பம்/– சி. சங்கர்,**
**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**